# தேச பக்தி
DHESA BAKTHI

நடுநிலை காலை நாளிதழ்

RNI.No.TNTAM/2022/86012

ஆசிரியர் : G. ராஜா 9842364068 இணைஆசிரியர் : R. கண்ணன் 9994422779

★மலர்:05 ★இதழ்:159 ★09.10.2026 ★தமிழ் நாளிதழ் ★வெள்ளிக்கிழமை ★பக்கம்-4 ★விலை.ரூ.5/- சென்னை

★Volume:05 ★Issue:159 ★09.10.2026 ★TamilDaily ★Friday ★Page-4 ★Price-₹5/- Chennai


## "அங்கன்வாடி நம் பொறுப்பு"... ஊட்டச்சத்து விழிப்புணர்வை ஏற்படுத்த 300க்கும் மேற்பட்ட அங்கன்வாடி பணியாளர்கள் பேரணி: ஆட்சியர் வந்தனா கார்க் தொடங்கி வைத்தார் - 18 பணியாளர்களுக்கு பாராட்டு

தேசிய ஊட்டச்சத்து மாதத்தை முன்னிட்டு, திருவண்ணாமலை மாவட்டத்தில் குழந்தைகள் மற்றும் தாய்மார்களின் ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் நடைபெற்ற "நமது அங்கன்வாடி – நமது பொறுப்பு" விழிப்புணர்வு பேரணியை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் இன்று (அக். 8) தொடங்கி வைத்தார்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை மற்றும் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், ஆட்சியர் வந்தனா கார்க் பேரணியை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

தமிழ்நாடு முழுவதும் சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை சார்பில், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம், ஊரக வளர்ச்சித்துறை, சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை, பள்ளிக் கல்வித்துறை, தோட்டக்கலைத்துறை உள்ளிட்ட பல்வேறு அரசுத் துறைகளுடன் ஒருங்கிணைந்து "போஷன் மா" தேசிய ஊட்டச்சத்து மாத விழா நடத்தப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலை மாவட்டத்தில் 9வது தேசிய ஊட்டச்சத்து மாத விழா கடந்த செப். 9ம் தேதி தொடங்கி அக். 9ம் தேதி வரை நடைபெறுகிறது. இதன் ஒரு பகுதியாக "நமது அங்கன்வாடி – நமது பொறுப்பு" என்ற விழிப்புணர்வு பிரசார பேரணி நடத்தப்பட்டது.

ஊட்டச்சத்து முதல் குழந்தை வளர்ப்பு வரை விழிப்புணர்வு

பேரணியில் 300க்கும் மேற்பட்ட அங்கன்வாடி பணியாளர்கள் கலந்து கொண்டனர். அவர்கள் ஊட்டச்சத்து தொடர்பான பல்வேறு முக்கிய கருத்துகளை பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் விழிப்புணர்வு பதாகைகளை ஏந்திச் சென்றனர்.

உணவில் பன்முகத்தன்மை மற்றும் போதுமான புரதச்சத்து, அங்கன்வாடி மையங்களில் வழங்கப்படும் புதிதாகச் சமைத்த சூடான உணவு, சமூக பங்கேற்பு மற்றும் பொறுப்புணர்வு, குழந்தைகளின் வளர்ச்சிக்குத் தேவையான ஊட்டச்சத்து மற்றும் ஆரம்பகால தூண்டுதல், பிரதம மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா மூலம் தாய்மார்களுக்கு வழங்கப்படும் பண உதவி உள்ளிட்ட 5 முக்கிய கருத்துகளை மையமாகக் கொண்டு பேரணி நடைபெற்றது. மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் தொடங்கிய பேரணி, முக்கிய வீதிகள் வழியாக சென்று அறிவியல் பூங்கா வரை நடைபெற்றது.

ஊட்டச்சத்து கண்காட்சி பார்வை

முன்னதாக, தேசிய ஊட்டச்சத்து மாதத்தை முன்னிட்டு அமைக்கப்பட்டிருந்த ஊட்டச்சத்து தொடர்பான கண்காட்சியை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் பார்வையிட்டார். கண்காட்சியில் குழந்தைகள், கர்ப்பிணிகள் மற்றும் பாலூட்டும் தாய்மார்களுக்கு தேவையான ஊட்டச்சத்து, ஆரோக்கியமான உணவுப் பழக்கங்கள் உள்ளிட்டவை தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் காட்சிப்படுத்தப்பட்டிருந்தது.

தொடர்ந்து மாவட்ட ஆட்சியர் தலைமையில், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் அனைவரும் தேசிய ஊட்டச்சத்து மாத உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்.

இந்தியாவில் ஒவ்வொரு தாய் மற்றும் குழந்தையும் ஊட்டச்சத்து குறைபாடின்றி ஆரோக்கியமாக வாழ்வதற்கான விழிப்புணர்வை ஏற்படுத்துதல், சரிவிகித சத்தான உணவு, தூய்மையான குடிநீர், சுகாதாரம், தாய்மை மற்றும் பச்சிளம் குழந்தைகளுக்கான சரியான உணவு வழங்கும் முறைகள் குறித்து ஒவ்வொரு குடும்பத்துக்கும் விழிப்புணர்வு ஏற்படுத்துதல் உள்ளிட்ட உறுதிமொழிகளை அவர்கள் ஏற்றுக்கொண்டனர்.



மேலும், தேசிய ஊட்டச்சத்து இயக்கத்தை மக்கள் இயக்கமாக மாற்றும் வகையில் ஒவ்வொரு வீடு, பள்ளி, கிராமம் மற்றும் நகரத்திலும் ஊட்டச்சத்து குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கு பங்களிப்போம் என்றும் உறுதியேற்றனர்.

18 அங்கன்வாடி பணியாளர்களுக்கு பாராட்டு

தேசிய ஊட்டச்சத்து மாத விழா மற்றும் அதனுடன் தொடர்புடைய பணிகளில் சிறப்பாக செயல்பட்ட 18 அங்கன்வாடி பணியாளர்களை மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் பாராட்டி, அவர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் கேடயங்களை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் செல்வம், மாவட்ட சமூக நல அலுவலர் கோமதி, ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர் அன்பரசி மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




மத்திய தேர்தல் ஆணையர் ஞானேஷ்குமார் பாஜகவுடன் இணைந்து இந்தியா முழுவதும் பல லட்சம் வாக்குகளை திருடியதாக கூறி பல்வேறு போராட்டங்கள் நடைபெற்று வருகிறது இதன் ஒரு பகுதியாக தமிழகம் முழுவதும் இந்திய கூட்டணிசார்பில்மாபெரும்ஆர்ப்பாட்டம்அந்தந்தமாவட்டஆட்சியர்அலுவலகம் முன்பு நடத்த மேலிடம் முடிவு செய்துள்ளது. அதன் பெயரில் கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவிலில் சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேஷ்குமார் தலைமையில் இந்திய கூட்டணி சார்பில் ஆலோசனைக் கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் வருகிற 14ம் தேதி நாகர்கோவிலில் உள்ள ஆட்சியர் அலுவலகம் முன்பு இந்திய கூட்டணி சார்பில் மாபெரும் ஆர்ப்பாட்டம், நடத்தப் போவதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது இந்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் 5000க்கும் மேற்பட்டோர் கலந்து கொள்ளப் போகிறார் எனவும் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

## மனித உயிருக்கு மதிப்பில்லையா? தூய்மைப் பணியாளர்களின் உயிரை அடகு வைக்கும் சின்னமனூர் நகராட்சி நிர்வாகம்

தேனி மாவட்டம், சின்னமனூர் நகராட்சி நிர்வாகத்தின் தொடர் அலட்சியப் போக்கால், தற்போது மனித உயிர்களுக்கே பாதுகாப்பு இல்லாத அவல சூழல் உருவாகியுள்ளது. 'தேசபக்தி' நாளிதழ் தொடர்ந்து நகராட்சியின் சீர்கேடுகளை பற்றி ஆதாரங்களுடன் சுட்டிக்காட்டி வந்தும், அதிகாரிகள் உறக்கத்திலேயே இருப்பது அப்பகுதி மக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது. இதன் உச்சக்கட்டமாக, சின்னமனூர் நகராட்சிக்குட்பட்ட பொன்நகரம் பகுதியில் நடைபெற்ற பாதாள சாக்கடை தொட்டி பராமரிப்பு பணியின் போது, எவ்விதமான பாதுகாப்பு உபகரணங்களும் இன்றி பணியில் ஈடுபட்ட கமலேஷ், பாலமுருகன், பிரசாத் மற்றும் சையது இப்ராஹீம் ஆகிய 4 தூய்மைப் பணியாளர்கள் நச்சு வாயு (விஷ வாயு) தாக்கி அடுத்தடுத்து மயங்கி விழுந்தனர். அருகில் இருந்தவர்களின் உடனடி மீட்பு நடவடிக்கையால் நல்வாய்ப்பாக உயிர்பலி தவிர்க்கப்பட்டு, அவர்கள் சின்னமனூர் மற்றும் தேனி அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகளில் தீவிர சிகிச்சைக்கு அனுமதிக்கப்பட்டுள்ளனர். சின்னமனூர் நகராட்சியில் கடந்த 100 நாட்களுக்கும் மேலாக ஆணையாளர் (Commissioner) நியமிக்கப்படாமல் நிர்வாகம் முற்றிலும் முடங்கி கிடக்கும் சூழலை பயன்படுத்தி, துறை சார்ந்த அதிகாரிகள் தங்களின் கடமையில் இருந்து முழுவதுமாக தவறியுள்ளனர். பொதுவாக நகராட்சியில் பாதாள சாக்கடை பராமரிப்பு, தூர்வாருதல் மற்றும் பணியாளர்களின் பாதுகாப்பு உபகரணங்களை உறுதி செய்தல் ஆகிய பணிகள் அனைத்தும் நகராட்சி பொறியாளரின் (Municipal Engineer ME) நேரடி கட்டுப்பாட்டிலும், களத்தில் இறங்கி பணிகளை நேர்த்தியான முறையில் கண்காணிக்க வேண்டியது ஓவர்சீர் (Overseer) மற்றும் உதவிப் பொறியாளரின் நேரடி பொறுப்பிலுமே வருகிறது. ரோபோடிக் இயந்திரங்கள் மற்றும் நவீன தொழில்நுட்பங்கள் வந்துவிட்ட இந்த அறிவியல் யுகத்திலும், எவ்வித பாதுகாப்பு கவசங்களும் இன்றி எளிய தூய்மைப் பணியாளர்களை கழிவுநீர் தொட்டிக்குள் இறங்கவிட்டது மன்னிக்க முடியாத குற்றமாகும். மேலும், நகராட்சியில் எந்த பிரச்சனைக்கு யாரை அணுகுவது, எந்தபணிக்கு எந்த அதிகாரி பொறுப்பு என்பது தெரியாமல் பொதுமக்கள் அன்றாடம் தவித்து வருகின்றனர். எனவே, சின்னமனூர் நகராட்சி உட்பட அனைத்து நகராட்சி அலுவலகங்களிலும் நகராட்சி பொறியாளர் (ME), உதவிப் பொறியாளர் (AE), ஓவர்சீர் (Overseer) உள்ளிட்ட அனைத்து பொறுப்பு அதிகாரிகளின் பெயர்கள், அவர்கள் வகிக்கும் துறை மற்றும் அவர்களின் நேரடி கைப்பேசி எண்கள் அடங்கிய வெளிப்படைத்தன்மையான தகவல் பலகையை (Public Notice Board) உடனடியாக பொதுமக்கள் பார்வைக்கு வைக்க வேண்டும். அப்போது தான் பொதுமக்கள் தங்களின் குறைகளை உரிய அதிகாரியிடம் நேரடியாக கேட்டு நிவர்த்தி செய்ய முடியும். 'தேசபக்தி' நாளிதழின் இந்தத் தொடர் எச்சரிக்கையை ஏற்று, பெரும் அசம்பாவிதம் நடப்பதற்குள் தேனி மாவட்ட ஆட்சியர் அவர்கள் உடனடியாக சின்னமனூரில் நேரில் ஆய்வு மேற்கொண்டு, தகுதியான ஆணையாளரை நியமிப்பதுடன், பணியாளர்களின் உயிருடன் விளையாடிய நகராட்சி பொறியாளர் மற்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் வலியுறுத்துகின்றனர்.








## திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகில் உள்ளமானூர் அரசு பள்ளியில் குடிநீர் தொட்டியில் மலம் கலப்பு; போலீசார் விசாரணை

திண்டுக்கல் மாவட்டம் பழநி அருகே மானூர் கிராமத்தில் அரசு தொடக்கப் பள்ளி தண்ணீர் தொட்டியில் சமூக விரோதிகள் மலம் கழித்ததால் பரபரப்பு காலாண்டு விடுமுறை காரணமாக, 10 நாட்களாக பூட்டப்பட்டிருந்த அரசு தொடக்கப்பள்ளி, திங்கட்கிழமை திறக்கப்பட்டது ஆசிரியர்கள் மற்றும் காலை உணவு பணியாளர்கள் பள்ளியை சுத்தம் செய்தபோது,

தண்ணீர் தொட்டியை கண்டு அதிர்ச்சி தண்ணீர் தொட்டிக்குள் மலம் கழிக்கப்பட்டிருந்ததை கண்டு ஆசிரியர்கள், காலை உணவு பணியாளர்கள் பேபி ஷாலினிஅதிர்ச்சி அடைந்தனர் இதையடுத்து உடனடியாக அந்த தண்ணீர் தொட்டியில் மலம் அகற்றப்பட்டு, சுத்தம் செய்யப்பட்டதாக கூறப்படுகிறது.

சமூக விரோதிகளின் அட்டூழிய சம்பவம் குறித்து தலைமை ஆசிரியர் ஜெயக்குமார், போலீசில் புகார் அளித்திருக்க வேண்டும் ஆனால், பள்ளி தண்ணீர் தொட்டிக்குள் மலம் கழித்திருப்பது பற்றி தலைமை ஆசிரியர் ஜெயக்குமார் காவல்நிலையத்தில் புகார் அளிக்கவில்லை காவல்துறை மற்றும் பள்ளிக்கல்வித்துறை அதிகாரிகள்யாருக்கும் தெரியாமல் HM மறைத்துவிட்டதாக கூறப்படுகிறது இந்த தகவல் 2 நாட்களுக்கு பிறகு தெரியவந்ததைத் தொடர்ந்து, பள்ளிக்கு திரண்டு வந்த பெற்றோர் முற்றுகையிட்டனர் பள்ளி தலைமை ஆசிரியர் ஜெயக்குமாரிடம் பெற்றோர் மற்றும் பொதுமக்கள் சம்பவம் பற்றி சரமாரியாக கேள்விகளை எழுப்பினர்



பெற்றோர் அளித்த தகவலின் அடிப்படையில், பழநி கீரனூர் காவல்நிலைய போலீசார் தீவிர விசாரணை எனத் தகவல் அரசு தொடக்கப்பள்ளி தண்ணீர் தொட்டியில் மலம் கழித்த சமூக விரோதிகள் யார்? என்பது பற்றி போலீசார் தீவிர விசாரணை.

## தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் காசநோய் விழிப்புணர்வு குறித்த தேசிய அளவிலான ஜோஷ் அணி (JOSH Joint Squad for Health) துவக்கவிழா நிகழ்ச்சி

தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் (08.10.2026) காசநோய் விழிப்புணர்வு குறித்த தேசிய அளவிலான ஜோஷ் அணி (JOSH Joint Squad for Health) துவக்கவிழா நிகழ்ச்சி காணொளிக்காட்சி வாயிலாக நடைபெற்றதையொட்டி, இந்நிகழ்ச்சியில் ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், இ.ஆ.ப., அவர்கள் பங்கேற்று, மாவட்ட அளவிலான ஜோஷ் மாவட்ட அணியை துவக்கி வைத்து பேசியதாவது,

தேசிய காசநோய் விழிப்புணர்வுத் திட்டம் ஒவ்வொரு ஆண்டும் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்திடும் பொருட்டு, பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை மேற்கொண்டு வருகிறது. மேலும், காசநோய் இல்லாத இந்தியாவை உருவாக்க பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் மற்றும் மருத்துவக் கண்காணிப்பு முகாம்களும் நடத்தப்பட்டு வருகின்றன.அதனடிப்படையில், இந்தாண்டு தேசிய அளவிலான ஜோஷ் அணி துவங்கப்பட்டுள்ளது. இதில் மாவட்ட நிலையிலான அலுவலர்கள், கல்லூரி அளவிலான தேசிய மாணவர்ப்படை (NCC), யுவபாரத தன்னார்வலர்கள் மற்று ம் சுகாதாரப்பணியாளர்கள் பங்கேற்று கிராமப்பகுதிகளிலிருந்து நகரப்பகுதிகள் வரை அனைத்து இடங்களிலும் பொதுமக்களிடம் காசநோயினால் ஏற்படும் தீமைகள் மற்றும் காசநோய் எவ்வாறு உருவாகிறது, அதை எந்த முறையில் தடுத்து, பாதுகாப்பாக ஆரோக்கியமுடன் இருந்திட வேண்டும் என வழிகாட்டும் பணிகளை ஜோஷ் அணியினர் மூலம் மேற்கொள்ள திட்டமிடப்பட்டுள்ளது. முதற்கட்டமாக, ஊரகப் பகுதிகளான இ.புதுப்பட்டி, டி.சிந்தலைச்சேரி, தாடிச்சேரி, கன்னியப்பப்பிள்ளைபட்டி மற்றும் காமராஜபுரம் ஆகிய 5 ஊராட்சிகளில் பேரணி, சுவர்விளம்பரங்கள், துண்டுப்பிரசுரங்கள் வழங்குதல், ஆலோசனைகள் வழங்குதல் உள்ளிட்ட பல்வேறு விழிப்புணர்வுப் பணிகளை மேற்கொள்ள உள்ளனர். குறிப்பாக, இந்த அமைப்பினர் ஒவ்வொரு ஆண்டும் பொதுமக்களிடம் காசநோயின் அறிகுறிகள், தடுப்பு முறைகள், ஆரம்பக்கட்ட பரிசோதனை மற்றும் முழுமையான சிகிச்சை முறைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன் இந்நோய் தாக்குதல் உள்ளவர்களை கண்டறிந்து அவர்கள் பூரணக் குணமடைய வழிகாட்டியாகவும், ஒவ்வொருவரும் தன்னால் முடிந்தவரை காசநோய் தாக்குதலிருந்து பாதுகாப்பாக இருந்திடும் வகையில் உறுதுணையாகவும் இருந்து தங்களது பங்களிப்பை வழங்கிட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன்,இ.ஆ.ப., அவர்கள் அறிவுரை வழங்கினார்.அதனைத் தொடர்ந்து, கடந்தாண்டு தேனி மாவட்டத்தில் காசநோய் இல்லாத ஊராட்சிகள் என தேர்வு செய்யப்பட்ட 13 ஊராட்சிகளை பாராட்டி கௌரவிக்கும் வகையில், ஊராட்சி செயலர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கியதுடன், இதேபோல் மாவட்டத்திலுள்ள அனைத்து ஊராட்சிகளும் சிறப்பாகச் செயல்பட்டு காசநோய் இல்லாத ஊராட்சிகளாக திகழ வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்தார். முன்னதாக, உறுதிமொழியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் அரசுத்துறை அலுவலர்கள், கல்லூரி மாணவ, மாணவியர்கள் மற்றும் தேசிய மாணவர்படை மாணவர்கள், தன்னார்வலர்கள் ஆகியோர் எடுத்துக்கொண்டனர்.

காசநோய் இல்லாத இந்தியா குறித்த விழிப்புணர்வுஇந்நிகழ்ச்சியில், திட்ட இயக்குநர் (ஊரக வளர்ச்சி ) திரு.துஷார் ஸ்ரீஹர் ஷிண்டே, இ.வ.ப., துணை இயக்குநர்(காசநோய்) மரு. ராஜபிரகாஷ், தேசிய மாணவர்படைப்பிரிவு கேப்டன் திரு.அப்துல்காதர், மாவட்ட நலக் கல்வியாளர் திரு.தர்மேந்திர கண்ணா, வட்டார மருத்துவ அலுவலர்கள், அரசு அலுவலர்கள் மாணவ, மாணவியர்கள் மற்றும் தன்னார்வலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# ராணிப்பேட்டையில் எல்ஐசி முகவர்களின் 11 அம்சக் கோரிக்கைகளை வலியுறுத்தி ஆர்ப்பாட்டம்

இராணிப்பேட்டை மாவட்டம் முத்துக்கடையில் எல்ஐசி முகவர்களின் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி, அகில இந்திய எல்ஐசி முகவர்கள் சங்கம் (LICAOI) வேலூர் கோட்டக் குழு சார்பில் நேற்று எல்ஐசி அலுவலகம் முன்பாக ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

எல்ஐசி முகவர்களின் நலன் மற்றும் பாலிசிதாரர்களின் நலனை கருத்தில் கொண்டு, பல்வேறு கோரிக்கைகளை மத்திய அரசு, IRDAI மற்றும் எல்ஐசிநிர்வாகம்நிறைவேற்ற வேண்டும் என சங்கம் வலியுறுத்தியது. மேலும் சங்கத்தின் முக்கிய கோரிக்கைகள் "சூப்பர் சேல்ஸ் சாத்தி" (Super Sales Sathi) திட்டத்தை எளிமையாக்கி முகவர்களுக்கு பயனுள்ளதாக மாற்ற வேண்டும். பிரீமியம் பாயிண்ட்ஸ் மூலம் ஏற்கெனவே வழங்கப்பட்டு வந்த சேவைகளை மீண்டும் வழங்க வேண்டும். எல்ஐசி முகவர்களின் குறைக்கப்பட்ட முதலாம் ஆண்டு கமிஷனை மீண்டும் வழங்க வேண்டும். அனைத்து முகவர்களுக்கும் மருத்துவக் காப்பீடு (Mediclaim) வசதியை அறிமுகப்படுத்த வேண்டும். எல்ஐசி நேரடி சந்தைப்படுத்தல் (Direct Marketing) முறையை நிறுத்த வேண்டும். பீமா சுகம், எக்ஸ்சேஞ்ச் மற்றும் போர்ட்டபிலிட்டி திட்டத்தை செயல்படுத்தக் கூடாது. எல்ஐசி முகவர்களுக்கு நலநிதி மற்றும் முறையான ஓய்வூதியத் திட்டத்தை தொடங்க வேண்டும். Renewal Premium முகவர்கள் தொடர்ந்து பெறும் வகையில் உரிமையை உறுதி செய்ய வேண்டும். முகவர்களுக்கு குழுக் காப்பீடு (Group Insurance) மூலம் வயது வரம்பை நீக்கி, பணியில் உள்ள அனைத்து முகவர்களுக்கும் காப்பீடு வழங்கவேண்டும். எல்ஐசி பங்குகளை விற்பதை நிறுத்தி, ஏற்கெனவே விற்பனை செய்யப்பட்ட பங்குகளை Buy Back முறையில் திரும்பப் பெற வேண்டும். முகவர் வாழ்வாதாரத்துக்கு பாதிப்பு ஏற்படுத்தும் நடவடிக்கைகளை நிறுத்த வேண்டும். மேலும், கமிஷன் மற்றும் GST தொடர்பான பிரச்சினைகளிலும் முகவர்களுக்கு நிவாரணம் வழங்க வேண்டும் என சங்கம் சார்பாக பல்வேறு கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன. இந்தக் கோரிக்கைகளை வலியுறுத்தி நாடு தழுவிய ஆர்ப்பாட்டம் நடைபெற்றது என்பது குறிப்பிடத்தக்கது.



# பல மாத கோரிக்கைக்கு தீர்வு: சேத்துப்பட்டு அரசு பள்ளியில் ஆபத்தான பழைய கட்டடம் அதிரடியாக இடித்து அகற்றம்

திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு பழம்பேட்டையில் உள்ள யூனியன் தொடக்கப் பள்ளி வளாகத்தில் பயன்பாடின்றி, சேதமடைந்து ஆபத்தான நிலையில் காணப்பட்ட பழைய பள்ளி கட்டடம் தற்போது முழுமையாக இடித்து அகற்றப்பட்டு வருகிறது.



நீண்ட காலமாக நிலவி வந்த ஆபத்தான சூழலுக்கு தீர்வு கிடைத்துள்ளதால், மாணவர்களின் பெற்றோர் மற்றும் பொது மக்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர்.

பழம்பேட்டை யூனியன் தொடக்கப்பள்ளியில் மாணவர்கள் தற்போது புதிய கட்டடத்தில் கல்வி பயின்று வருகின்றனர். இதனால், பழைய பள்ளி கட்டடம் பயன்பாடின்றி இருந்தது.

எனினும், பள்ளி வளாகத்தில் அமைந்திருந்த அந்த கட்டடத்தைச் சுற்றிலும் மாணவர்கள் விளையாடுவதும், சில நேரங்களில் கட்டடத்திற்குள்செல்வதும்தொடர்ந்து வந்ததாக கூறப்படுகிறது.

ஏற்கனவே சேதமடைந்த நிலையில் காணப்பட்ட பழைய கட்டடத்தின் சில பகுதிகள் வலுவிழந்து காணப்பட்டதால், எதிர்பாராத நேரத்தில் கட்டடத்தின் ஒரு பகுதி இடிந்து விழும் அபாயம் நிலவியது. இதனால், மாணவர்களின் பாதுகாப்பு குறித்து பெற்றோர், பள்ளி நிர்வாகம் மற்றும் பொதுமக்கள் அச்சம் அடைந்தனர்.

இதையடுத்து, ஆபத்தான நிலையில் உள்ள பழைய கட்டடத்தை உடனடியாக அகற்ற வேண்டும் என பள்ளி நிர்வாகம், பெற்றோர் மற்றும் பொது மக்கள் சார்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் பலமுறை மனுக்கள் அளிக்கப்பட்டதாக கூறப்படுகிறது.

இருப்பினும், கட்டடத்தை அகற்றுவதற்கான நிர்வாக நடைமுறைகள் காரணமாக பணிகள் தொடங்குவதில் காலதாமதம் ஏற்பட்டது.

மேலும், அந்தப் பழைய பள்ளி கட்டடம் முதன்மைக் கல்வி அலுவலர் பெயரில் பதிவு செய்யப்படாத நிலையில் இருந்ததால், உரிய ஆவணங்கள் மற்றும் நடைமுறைகளை பின்பற்றிய பின்னரே கட்டடத்தை அகற்ற முடியும் என அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப்பட்டதாக கூறப்பட்டது.

செய்தி வெளியான நிலையில் நடவடிக்கை

இதுகுறித்து கடந்த ஆகஸ்ட் மாதம் தினகரன் நாளிதழில் படத்துடன் செய்தி வெளியிடப்பட்டது. இதன் தொடர்ச்சியாக, அதிகாரிகள்தரப்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு, கடந்த செப்டம்பர் மாத இறுதியில் பழைய கட்டடத்தை அகற்ற முடிவு செய்யப்பட்டது.

இதைத்தொடர்ந்து தற்போது பழைய பள்ளி கட்டடத்தை இடிக்கும் பணி தொடங்கப்பட்டு, கட்டடம் முழுவதும் இடிக்கப்பட்டு வருகிறது. மேலும், இடிக்கப்பட்ட கட்டடத்தின் இடிபாடுகளை அகற்றும் பணியும் நடைபெற்று வருகிறது.

நீண்ட காலமாக மாணவர்களின் பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்து வந்த பழைய கட்டடம் தற்போது அகற்றப்பட்டுள்ளதால், பள்ளி வளாகம் பாதுகாப்பானதாக மாறும் நிலை ஏற்பட்டுள்ளது. மாணவர்களின் பாதுகாப்பு கருதி கட்டடத்தில் கொண்டு மேற்கொள்ளப்பட்ட இந்த நடவடிக்கையை பெற்றோர் மற்றும் பொதுமக்கள் வரவேற்றுள்ளனர்.

# வடகரை ஸ்ரீ சீனிவாச பெருமாள் ஆலயத்தில் புரட்டாசி மாத திருவிழா





மாதவரம் தொகுதி புழல் ஒன்றியம் வடகரை ஊராட்சி மேட்டுத்தெரு ஸ்ரீதேவி பூதேவி சமேத ஸ்ரீ சீனிவாச பெருமாள் ஆலயத்தில் 7ஆம் ஆண்டு புரட்டாசி மாத திருவிழா ஆலய நிர்வாகிகள் மற்றும் கிராம பொது மக்கள் ஏற்பாட்டில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் மூலவருக்கு பல்வேறு வாசனை திரவியங்களால் அபிஷேகம் செய்து வண்ணமலர்களால் சிறப்பு அலங்காரம் செய்யப்பட்டு மஹா தீபாராதனை காண்பிக்கப்பட்டது. மேலும் இத்திருவிழாவை முன்னிட்டு ஆலயம் மற்றும் உபயதாரர்கள் சார்பில் பக்தர்களுக்கு அறுசுவை அன்னதானம் வழங்கினர்.

இதில் ஆலய நிர்வாகிகள், சுற்று வட்டார பக்தர்கள் உள்ளிட்ட கிராமபொதுமக்கள் திரளாக கலந்து கொண்டு அர்ச்சனை செய்து சுவாமி தரிசனம் செய்தனர். முடிவில் உற்சவர் சிறப்பு அலங்காரத்துடன் மேளதாள வான வேடிக்கையுடன்திருவீதி உலாநடைபெற்றது.




# செய்யாறு நகராட்சி சார்பில் 6.5 டன் பிளாஸ்டிக் கழிவுகள் சிமெண்ட் தொழிற்சாலைக்கு அனுப்பி வைப்பு

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு நகராட்சி சார்பில் 6.5 டன் பிளாஸ்டிக் கழிவுகள் சிமெண்ட் தொழிற்சாலைக்கு நேற்று அனுப்பி வைக்கப்பட்டது. திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் நகராட்சி பகுதிக்கு உட்பட்ட அனைத்து வார்டுகளிலும் சேகரிக்கப்பட்ட சுமார்6.5டன்எடையுள்ளபிளாஸ்டிக்பொருட்கள் மற்றும் மக்காத குப்பைகள் சிமெண்ட் தொழிற்சாலைக்குநகராட்சிஆணையாளர்செ.ஆண்ரூஸ்,துப்புரவு கே.மதனராசன் ஆகியோர் முன்னிலையில் நேற்று மாலை அனுப்பி வைக்கப்பட்டது




திண்டுக்கல் மாவட்டம் பழனி புது தாராபுரம் ரோட்டில் ரயில்வே கேட் மேம்பாலம் கட்டுமான பணி நடைபெற்ற வருகிறது இந்த கட்டுமான பணி எந்த விதமான முன்னறிவிப்பு இன்றி காங்கிரட் லாரிகளே அடிக்கடிகொண்டுவந்துநிறுத்திவிட்டுசெல்கின்றனர் இதனால் வாகன ஓட்டிகள் மிகவும் சிரமத்துக்கு உள்ளாகின்றனர் இதனை உடனடியாக சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என வாகன ஓட்டிகள் மற்றும் பொதுமக்கள் சமூக ஆர்வலர்கள் கோரிக்கை வைத்துள்ளனர்




திண்டுக்கல் மாவட்டம் பழனியில் பழனி முருகன் மலைக்கு தமிழக வருவாய் துறை அமைச்சர் செங்கோட்டையன் மற்றும் தாராபுரம் தமிழக வெற்றி கழக வேட்பாளர் சத்திய பாமா மற்றும் தமிழக வெற்றிக்காகநிர்வாகிகள்மற்றும்கட்சித்தொண்டர்கள் பழனி முருகன் திருக்கோயில் ராக்கால பூஜைக்கு கலந்து கொள்வதற்காக பழனி வந்தனர் அப்போது பழனி செய்தியாளர்களுக்கு மற்றும் பத்திரிகையாளர்களுக்கு பேட்டி கொடுத்தபோது எடுத்த படம்






திண்டுக்கல் மாவட்டம் பழனியில் குட் லயன்ஸ் கிளப் மற்றும் பாலா குரூப்ஸ் மற்றும் கோவை இந்துஸ்தான் மருத்துவமனை இணைந்து பழனியில் நேற்று 7.10.2026. இட்டேரி ரோட்டில் உள்ள ஒரு தனியார் மண்டபத்தில் இலவச மருத்துவ முகாம் நடைபெற்றது இந்த மருத்துவ முகாமிற்கு பழனி சட்டமன்ற உறுப்பினர் திரு ரவி மனோகரன் அவர்கள் சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டார் மற்றும் கோவை இந்துஸ்தான் மருத்துவமனையின் இருதய மற்றும் சர்க்கரை நோய் சிறப்பு மருத்துவர் எம் செந்தில் குமார் அவர்கள் தலைமையில் ஹிந்துஸ்தான் ஹாஸ்பிடல் உள்ள டாக்டர்கள் மற்றும் செவிலியர்கள் சேர்ந்து முகாமில் கலந்து கொண்ட பொது மக்களுக்கு தங்கள் உடம்புகளுக்கு என்ன தொந்தரவு என்று கேட்டு அதற்குண்டான மருந்து மாத்திரைகள் உடனுக்குடன்அங்கேயேவழங்கிசிகிச்சைஅளித்தனர் மேல்சிகிச்சைதேவைப்பட்டால்கோவைஇந்துஸ்தான் ஹாஸ்பிடல் க்கு வரும்படி தெரிவித்தனர் இந்த முகாமில் லயன்ஸ் கிளப் தலைவர் மற்றும் செயலாளர் மற்றும் பொருளாளர் மற்றும் அனைத்து உறுப்பினர்களும் கலந்து கொண்டனர் அதேபோல் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்ற கழகத்தின் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்

# செய்யாறு அருகே புரிசையில் நாடகக் கலை விழா



திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு தாலுக்கா புரிசை துரைசாமி கண்ணப்பத்தம்பிரான் பரம்பரை தெருக்கூத்து மன்றம் சார்பில் கலைமாமணி கண்ணப்பத்தம்பிரான் நினைவு நாடகக் கலை விழா மற்றும் கலைமாமணி கண்ணப்பத்தம்பிரான் வாழ்நாள் சாதனையாளர் விருது வழங்குவிழா புரிசை கிராமத்தில் நடந்தது. நிகழ்ச்சிக்கு பத்மஸ்ரீ கலைமாமணி பி.கே.சம்பந்தன் தலைமை தாங்கினார். திருவண்ணாமலை மாவட்டம் பாப்பம்பாடி கிராமம் கலைமாமணி முனுசாமிக்கு தமிழ்நாடு அரசு ஆணையரகம் கலை மற்றும் பண்பாட்டு துணை இயக்குனர் (திட்டங்கள்) ஹேமநாதன் வாழ்நாள் சாதனை விருது வழங்கினார். தொடர்ந்து செய்யூர் தோள்கட்டை இருளர் கலைக்குழு பழங்குடியினர் இசையும் , தூத்துக்குடி பண்பாட்டு வெளி வெக்கை கலை இலக்கிய குழுவின் தனிநபர் நாடகமும், பொள்ளாச்சி ஸ்டார் சிக்கட்ட கலைக்குழு சார்பில் ஜிக்காட்டமும் அதனைத்தொடர்ந்து மும்பை ளிப்பில்லி ப்ரொடக்ஷன் சார்பில் லாவண்யாவதி நாடகமும் நடந்தது. தொடர்ந்து விழுப்புரம் கம்பம் குழு மன்னன் கை கொடுக்கும் கை மாற்றுத் திறனாளிகள் மல்லர் நாடகமும் தமிழ்நாடு மாதிரி பள்ளிகள் சார்பில் முன்னடியோர்நாடகமும்குறிசை கண்ணப்ப தம்பிதான் பரம்பரை தெருக்கூத்து மன்றம் சார்பில் 18 ஆம் போர் நாடகமும் நடந்தது

# பிரதம மந்திரியின் குறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் முறைப்படுத்தும் திட்டம் (PMFME) இராணிப்பேட்டை மாவட்டத்தில் 146 பயனாளிகளுக்கு இலக்கு நிர்ணயம்

## தகுதியுடையோர் விண்ணப்பிக்க இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன் அழைப்பு

இராணிப்பேட்டை மாவட்டத்தில் குறு உணவு பதப்படுத்தும் தொழில்களை ஊக்குவிக்கும் வகையில், மாவட்ட தொழில் மையம் மூலம் பிரதம மந்திரியின் குறு உணவு பதப்படுத்தும் நிறுவனங்கள் முறை ப்படுத்தும் திட்டம் (PMFME) செயல்படுத்தப்பட்டு வருவதாக மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ், ஏற்கனவே செயல்பட்டு வரும் குறு உணவு பதப்படுத்தும் நிறுவன ங்களுக்கும்.



புதிதாகத் தொழில் தொடங்க விரும்பும் தகுதியான தொழில் முனைவோருக்கும் வங்கிக் கடனுடன் இணைந்த மானிய உதவி வழங்கப்படுகிறது. தொழில்களை நவீனப்படுத்துதல், விரிவாக்கம் செய்தல் மற்றும் மதிப்புக் கூட்டப்பட்ட உணவுப் பொருட்களின் உற்பத்தியை ஊக்குவித்தல் ஆகியவை இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாகும்.

திட்டத்தின் கீழ் மேற்கொள்ளக்கூடியதொழில் கள்மாவு மில், எண்ணெய் மில், அரிசி ஆலை, சிறுதானிய மதிப்புக் கூட்டப்பட்ட உணவுப் பொருட்கள், பேக்கரி பொருட்கள், மசாலா பொருட்கள், முறுக்கு, மிக்சர், சிப்ஸ் போன்ற சிற்றுண்டி வகைகள் மற்றும் பழங்கள், காய்கறிகள் உள்ளிட்ட வேளாண் விளைபொருட்களை அடிப்படையாகக் கொண்ட உணவு பதப்படுத்தும் தொழில்கள்.

நிதி உதவி விவரம்

தகுதியான பயனாளிகளுக்குத் திட்டச் செலவில் 35 சதவீதம் வரை, (அதிகபட்சமாகரூ.10.00 இலட்சம் வரை) கடனுடன் இணைந்த மானியம் வழங்கப்படும். பயனாளியின் பங்களிப்பாகக் குறைந்தபட்சம் 10 சதவீதம் இருக்க வேண்டும். மீதமுள்ள தொகை வங்கிக் கடனாக ஏற்பாடு செய்யப்படும்.

எனவே, தகுதியுடைய தொழில் முனைவோர் இவ்வாய்ப்பைப் பயன்படுத்தி, புதிய உணவு பதப்படுத்தும் தொழில்களைத் தொடங்கவும், ஏற்கனவே செயல்பட்டு வரும் தொழில்களை நவீனப்படுத்தி விரிவுபடுத்தவும் முன்வர வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.அ.ப. அவர்கள் தெரிவித்துள்ளார். மேலும்விவரங்களுக்குத் தொடர்பு கொள்ள: 1. (DRP1) 7092656497; 2. . (DRP 2)8883265019

# வெயிலை விரட்டிய கனமழை! சேத்துப்பட்டில் அரை மணி நேரம் வெளுத்து வாங்கிய மழை - சாலைகளில் பெருக்கெடுத்த மழைநீர்

திருவண்ணாமலை மாவட்டம் சேத்துப்பட்டு பகுதியில் நேற்று காலை முதல் கடுமையான வெயில் நிலவி வந்த நிலையில், மதிய நேரத்தில் திடீரென வானம் கருமேகங்களால் சூழப்பட்டு பலத்த காற்றுடன் கனமழை பெய்தது. சுமார் அரை மணி நேரம் தொடர்ந்து பெய்த கனமழையால் நகரின் பல்வேறு பகுதிகளில் மழைநீர் தேங்கியதுடன், பொதுமக்களின் இயல்பு வாழ்க்கையிலும் பாதிப்பு ஏற்பட்டது.

காலை முதல் வெயில் கொளுத்திய நிலையில், மதியத்தில் திடீரென வானிலை மாறியது. கருமேகங்கள் திரண்டு வந்ததைத் தொடர்ந்து பலத்த காற்று வீசியதுடன், சிறிது நேரத்தில் கனமழை கொட்டித் தீர்த்தது. திடீரென பெய்த கனமழையால் சாலைகளில் சென்ற பொதுமக்கள் மற்றும் வாகன ஓட்டிகள் அவதிக்குள்ளாகினர்.

விவசாயிகள் மகிழ்ச்சி

கனமழையால் வெப்பம் தணிந்து சேத்துப்பட்டு பகுதியில் குளிர்ச்சியான சூழல் நிலவியது.

நீண்ட நேரம் வெயிலால் அவதிப்பட்ட பொதுமக்கள்மழையால் நிம்மதி அடைந்தனர். அதே நேரத்தில், விவசாயத்திற்கு மழை பயனுள்ளதாக இருக்கும் என்பதால் விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.

சாலையில் பெருக்கெடுத்த மழைநீர்

சேத்துப்பட்டு பேரூராட்சிக்கு உட்பட்ட தாழ்வான பகுதிகளில் கனமழை காரணமாக மழைநீர் தேங்கியது. குறிப்பாக போளூர் சாலையில் தாலுகா அலுவலகம் அருகே உள்ள கால்வாயில் மழைநீர் அதிகளவில் பெருக்கெடுத்து சாலையில் வெள்ளம் போல் ஓடியது.

இதனால் போளூர் சாலையில் அந்த வழியாக சென்ற இருசக்கர வாகனங்கள் மற்றும் கார்கள் உள்ளிட்ட வாகன ஓட்டிகள் சிரமத்திற்கு உள்ளாகினர். சாலையில் தேங்கிய மழைநீரை கடந்து செல்ல வாகன ஓட்டிகள் மிகவும் சிரமப்பட்டனர்.

மேலும், சேத்துப்பட்டு நான்கு முனை சந்திப்பு மற்றும் பஸ் நிலையப் பகுதிகளில் மழைநீர் தேங்கியதால், பேருந்துக்காக காத்திருந்த பயணிகள் மற்றும் பொதுமக்களும் பாதிக்கப்பட்டனர். திடீரென பெய்த கனமழையால் சில இடங்களில் போக்குவரத்து இயக்கமும் மந்தமானது.




கால்வாய்களில் மழைநீர் சீராக வெளியேறுவதற்கான வசதிகளைமேம்படுத்தி, தாழ்வான பகுதிகளில் மழைநீர் தேங்காத வகையில் நிரந்தர நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# செய்யாறில் மின்வாரிய செயற்பொறியாளர் அலுவலகம் எதிரில் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை கைவிடக் கோரி ஒலி முழக்க போராட்டம்

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறில் மின்வாரிய செயற்பொறியாளர் அலுவலகம் எதிரில் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை கைவிடக் கோரி ஒலி முழக்க போராட்டம் நேற்று நடைபெற்றது.



தமிழக மின்சாரவாரியத்தில் அனைத்து மின் இணைப்புகளுக்கும் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை பொருத்துவதற்கான ஒப்பந்த புள்ளி கோரபட்டுள்ளது ஸ்மார்ட் மீட்டர் பொருத்தினால் மின்கட்டணம் உயரும் மீட்டர் வாடகை செலுத்த வேண்டும் மற்றும் மீட்டர் பராமரிப்பு கட்டணம் செலுத்த வேண்டும் அனைத்தும் தனியாரிடம் சென்று விடும் அதை கண்டித்து செய்யாறு கோட்டத்தில் ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை கைவிடக் கோரி ஒலி முழக்க போராட்டம் நேற்று நடைபெற்றது.

செய்யாறு மின்வாரிய செயற்பொறியாளர் அலுவலகம் எதிரில் நடைபெற்ற ஒலி முழக்க போராட்டத்திற்கு கோட்டத் தலைவர் மாரிமுத்து தலைமை தாங்கினார். ஸ்மார்ட் மீட்டர் திட்டத்தை ரத்து செய்ய கோரி வி.எம். வெங்கடேசன் சிறப்பு உரையாற்றினார். போராட்டத்தில் 25க்கும் மேற்பட்டோர் பங்கேற்றிருந்தனர்.

## தாலி பறிப்பு நடந்த இடத்தில் அதிரடி ஆய்வு:

# பாழடைந்த குடியிருப்புகளை அகற்ற முக்கூர் சுப்பிரமணியன் MLA-சார் ஆட்சியர் அம்பிகா ஜெயின் வலியுறுத்தல்

திருவண்ணாமலை மாவட்டம் செய்யாறு ஹவுசிங் போர்டு பகுதியில் பெண்ணைத் தாக்கி தாலி பறித்த சம்பவம் நடைபெற்ற இடத்தில், செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் முக்கூர் சுப்பிரமணியன், சார் ஆட்சியர் அம்பிகா ஜெயின் ஆகியோர் நேரில் ஆய்வு மேற்கொண்டனர்.



செய்யாறு ஹவுசிங் போர்டு பகுதியில் சுமார் 180 குடும்பங்கள் வசித்து வருகின்றனர். இந்நிலையில், கடந்த சில நாட்களுக்கு முன்பு அப்பகுதியில் பெண் ஒருவரை கருங்கல்லால் தாக்கி, அவரது கழுத்தில் இருந்த தாலிக் கயிற்றை அறுத்து மர்ம நபர்கள் பறித்துச் சென்றனர்.

இந்த சம்பவம் அப்பகுதி மக்களிடையே பெரும் அச்சத்தை ஏற்படுத்தியது.

இதைத்தொடர்ந்து, அப்பகுதி மக்கள் செய்யாறு சட்டமன்ற உறுப்பினர் முக்கூர் சுப்பிரமணியனிடம் புகார் தெரிவித்தனர். அப்போது, ஹவுசிங் போர்டு பகுதியில் பயன்பாடின்றி சிதிலமடைந்த நிலையில் உள்ள குடியிருப்புகள், தெருவிளக்குகள் செயல்படாத நிலை, அதிகளவில் வளர்ந்துள்ள புதர்கள் ஆகியவற்றால் பாதுகாப்பற்ற சூழல் நிலவுவதாக பொதுமக்கள் தெரிவித்தனர்.

மேலும், பாழடைந்த குடியிருப்புகளுக்குள் மர்ம நபர்கள் வந்து செல்வதாகவும் புகார் கூறினர்.

இதையடுத்து, முக்கூர் சுப்பிரமணியன், சார் ஆட்சியர் அம்பிகா ஜெயினுடன் அப்பகுதிக்கு நேரில் சென்று ஆய்வு மேற்கொண்டார். அப்போது, பயன்பாடின்றி சிதிலமடைந்து காணப்படும் வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகள் மற்றும் அவற்றைச் சுற்றியுள்ள பகுதிகளை பார்வையிட்டனர்.

பொதுமக்களின் பாதுகாப்பைக் கருத்தில் கொண்டு, பயன்பாட்டில் இல்லாத சிதிலமடைந்த குடியிருப்பு கட்டிடங்களை உரிய முறையில் அகற்ற நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று முக்கூர் சுப்பிரமணியன், சார் ஆட்சியர் அம்பிகா ஜெயினிடம் வலியுறுத்தினார். மேலும், தெருவிளக்குகளை சீரமைத்து, புதர்களை அகற்றி, இரவு நேரங்களில் பொதுமக்கள் அச்சமின்றி நடமாடுவதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

ஆய்வின்போது வட்டாட்சியர் திருவேங்கடம், துணை வட்டார வளர்ச்சி அலுவலர்கள், வருவாய்த் துறை அலுவலர்கள் மற்றும் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உடனிருந்தனர். அதிமுக ஒன்றியச் செயலாளர்கள் அரங்கநாதன், துரை, வழக்கறிஞர் முனுசாமி, மோகன் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

# செங்குன்றத்தில் பேருந்துப் பயணிகளுக்கு எம்.பி. அல்லது எம்எல்ஏ நிழற்குடை அமைத்து தருவார்களா?

மாதவரம் தொகுதி செங்குன்றம் (நாரவாரிக் குப்பம்) பேரூராட்சி அண்ணா பேருந்து நிலையத்திலிருந்து 300க்கும் மேற்பட்ட பேருந்துகள் இயக்கப்படுகின்றன.

250க்கும் மேற்பட்ட ஆட்டோக்களும் பயணிகளை ஏற்றிச் செல்கின்றனர். அண்மையில் தான் செங்குன்றம் அண்ணா பேருந்து நிலையம் புனரமைக்கப்பட்டு திறக்கப்பட்டது.



சென்னை உள்ளிட்ட பல்வேறு நகரங்களுக்கு அண்ணா பேருந்து நிலையத்திற்கு எதிரே எம்ஜிஆர் சிலை அருகிலிருந்து வேலைக்கு செல்லும் ஆண்கள் பெண்கள், மருத்துவமனைக்கு செல்வோர், பள்ளி கல்லூரிகளுக்கு செல்லும் மாணாக்கர்கள் என தினந்தோறும் 5000த்திற்கும் மேற்பட்டோர் பயணித்து வருகின்றனர்.

ஆனால் பயணிகள் ஒதுங்கி நிற்கும் அளவுக்கு நிழற்குடை வசதி இல்லை.

இதனால் மழை, வெயில் காலங்களில் பேருந்து பயணிகள் மிகவும் சிரமத்திற்கு உள்ளாகி வருகின்றனர்.

எனவே பேருந்துநிலையம் எதிரே உடனடியாக திருவள்ளூர் நாடாளுமன்ற உறுப்பினரோ மாதவரம் சட்டமன்றஉறுப்பினரோ தங்களுடைய நிதியிலிருந்து பேருந்து நிழற்குடை அமைத்து தர வேண்டுமென்று பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# திண்டுக்கல் நகர் பகுதியில் 18 வயதிற்கு உட்பட்ட சிறுவர்கள் ஓட்டிய 5 இருசக்கர வாகனங்கள் பறிமுதல் சம்பந்தப்பட்ட 5 பெற்றோர்கள் மீது வழக்கு பதிவு, தலா ரூ.25,000/ அபராதம்

திண்டுக்கல் நகர் பகுதிகளில் 18 வயதிற்கு கீழ் உள்ள சிறுவர்கள் அதிகப்படியான இருசக்கர வாகனங்கள் ஓட்டுவதாக கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில், திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் அவர்களின் உத்தரவின் பேரில், திண்டுக்கல் நகர் உட்கோட்ட காவல் துணைக்கண்காணிப்பாளர்கார்த்திக் மேற்பார்வையில், நகர் போக்குவரத்து காவல் ஆய்வாளர் வள்ளியம்மாள் தலைமையிலான போக்குவரத்து போலீசார் நாகல்நகர், ரவுண்டானா, ஆர்த்தி தியேட்டர் சாலை மற்றும் பள்ளி பகுதிகளான முக்கிய இடங்களில் சோதனையில் ஈடுபட்டனர்.

அப்போது நடத்தப்பட்ட சோதனையில் சட்டப்பூர்வ ஓட்டுனர் உரிமம் பெறும் வயதை எட்டாத 5 சிறுவர்கள் இருசக்கர வாகனங்களை ஓட்டி வந்தது கண்டறியப்பட்டு, அந்த 5 வாகனங்களும் காவல்துறையினரால் பறிமுதல் செய்யப்பட்டு, திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலைய காவல் ஆய்வாளர் வசந்தகுமார் அவர்கள் வசம் ஒப்படைக்கப்பட்டது.

இதுதொடர்பாக மேற்படி சிறுவர்களின் பெற்றோர்கள் திண்டுக்கல் நகர் வடக்கு காவல் நிலையம் வரவழைக்கப்பட்டு, சிறுவர்களுக்கு வாகனங்களை ஓட்ட அனுமதித்த குற்றத்திற்காக மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் 5 பெற்றோர்கள் மீதும் வழக்குப்பதிவு செய்யப்பட்டு, தலா ரூ. 25,000/ அபராதம் விதிக்கப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, பெற்றோர்களுக்கு அறிவுரை வழங்கிய திண்டுக்கல் நகர் உட்கோட்ட காவல் துணைக் கண்காணிப்பாளர் திரு. கார்த்திக், "சிறுவர்களிடம் வாகனங்களைக் கொடுப்பது அவர்களின் உயிருக்கு மட்டுமின்றி, சாலையில் செல்லும் மற்றவர்களின் பாதுகாப்பிற்கும் ஆபத்தை ஏற்படுத்தும். குழந்தைகள் ஆசையாகக் கேட்டாலும் பெற்றோர்கள் கண்டிப்புடன் மறுக்க வேண்டும்; இன்று காட்டும் சிறிய அலட்சியம் நாளை மிகப்பெரிய இழப்பாக மாறிவிடக்கூடாது. அபராதம் விதிப்பது காவல்துறையின் நோக்கம் அல்ல, எந்தவொரு குடும்பமும் விபத்தின் வலியைச் சந்திக்கக் கூடாது என்பதே முக்கிய நோக்கம்" எனக் கூறி எச்சரித்தார்.

இதுபோன்ற சோதனைகள் திண்டுக்கல் மாவட்டத்தில் அனைத்து இடங்களிலும் தொடர்ந்து நடைபெறும் என திண்டுக்கல் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார்,தெரிவித்துள்ளார்கள்.



# திண்டுக்கல் அருகே பல்சர் இருசக்கர வாகனம் மீது சரக்கு வேன் மோதி விபத்து 1 கல்லூரி மாணவர் பலி 2 மாணவர்கள் படுகாயம்

திண்டுக்கல், நத்தம் சாலை, RMTCநகர்அருகே திரு இருதய கலை மற்றும் அறிவியல் கல்லூரி *(Sacred Heart College of Arts and Science)* மாணவர்கள் வந்த இரு சக்கர வாகனம் மீது சரக்கு வேன் மோதி விபத்து இந்த விபத்தில் கல்லூரி மாணவர் சசி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். பாலாஜி, கோகுல் ஆகிய இரண்டு மாணவர்கள் படுகாயம் அடைந்து சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளார். நேற்று இதே இடத்தில் சாலை விபத்தில் ஒருவர் உயிரிழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

அப்பகுதியில் ஏற்படும்தொடர்விபத்துகளை தடுக்க மாவட்ட காவல் கண்காணிப்பாளர் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று வாகன ஓட்டிகள் மற்றும் சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள்

# இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் ந.ப்ரியா ரவிச்சந்திரன், தலைமையில் 9வது தேசிய ஊட்டச்சத்து மாத நிறைவு விழா

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில் 9வது தேசிய ஊட்டச்சத்து மாத நிறைவு விழா நடைபெற்றது.

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன். இ.ஆ.ப., அவர்கள் இன்று (08.10.2026) வாலாஜா அறிஞர் அண்ணா அரசினர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டம் மற்றும் மாநில ஊரக நகர்ப்புற வாழ்வாதார இயக்கம் இணைந்து நடைபெற்ற 9வது தேசிய ஊட்டச்சத்து மாத நிறைவு விழாவில் தேசிய ஊட்டச்சத்து மாதத்தையொட்டி நடத்தப்பட்ட பல்வேறு விழிப்புணர்வு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும். நிகழ்ச்சிகளை வட்டார அளவில் நடத்திய குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்களுக்கும் பரிசுகள் வழங்கினார்.

தொடர்ந்து, தேசிய ஊட்டச்சத்து மாத நிறைவு விழாவை முன்னிட்டு, ஊட்டச்சத்து உறுதிமொழியினை அனைவரும் எடுத்துக் கொண்டனர்.

பின்னர், அங்கன்வாடி பணியாளர்களால் ஊட்டச்சத்து கண்காட்சி அமைக்கப்பட்டுள்ளதை பார்வையிட்டார்.

ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சிப் பணிகள் திட்டத்தின் சார்பில் ஒவ்வொரு ஆண்டும் செப்டம்பர் மாதம் தேசிய ஊட்டச்சத்து மாத விழா *(Poshan Maah)* பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளுடன் கொண்டாடப்பட்டு வருகிறது.

இந்த ஆண்டு "நமது அங்கன்வாடி நமது பொறுப்பு" என்ற கருப்பொருளின் கீழ், உணவில் பல்வேறு வகைகள் மற்றும் போதுமான புரதச்சத்து, அங்கன்வாடி மையங்களில் புதிதாக சமைக்கப்பட்ட சூடான உணவு, சமூகத்தின் பொறுப்புணர்வு மற்றும் பொறுப்பு ஏற்பு, குழந்தைகளின் வளர்ச்சிக்கான ஊட்டச்சத்து மற்றும் ஆரம்ப கால தூண்டுதல், பிரதான் மந்திரி மாத்ரு வந்தனா யோஜனா (PMMVY) மூலம் தாய்மார்களுக்கான பணப் பரிமாற்ற உதவி ஆகிய ஐந்து முக்கிய தலைப்புகளில் பல்வேறு விழிப்புணர்வுநிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகின்றன.

இவ்விழா செப்டம்பர் மாதம் 9 தேதி துவங்கி அக்டோபர் மாதம் 8 ஆம் தேதி வரை கிராம, வட்டார, மாவட்ட அளவில் தினமும் ஊட்டச்சத்தின் முக்கியத்துவம் குறித்த பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டது.





மேலும் ஆரம்ப சுகாதார நிலையங்கள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் அங்கன்வாடி மையங்களில் உள்ள குழந்தைகள், தாய்மார்கள், பள்ளி மற்றும் கல்லூரி மாணவிகள் இடையே ஆரோக்கியமான குழந்தை போட்டி, மாறுவேட போட்டி, பேச்சுப்போட்டி, ஸ்லோகன் போட்டி, சுவரொட்டி தயாரித்தல். கட்டுரைப் போட்டி, சமையல் போட்டி. நெருப்பில்லா சமையல்போட்டிபோன்ற போட்டிகள் நடத்தப்பட்டு பரிசுகள் வழங்கப்பட்டது.

இன்று நிறைவு விழாவில் மாவட்ட அளவில் இம்மாதம் நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்ற குழந்தைகள், தாய்மார்கள், அங்கன்வாடி பணியாளர்கள் மற்றும் இம்மாதம் முழுவதும் பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை வட்டார அளவில் நடத்திய குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலர்களுக்கும் மாவட்ட ஆட்சியர் அவர்கள் பரிசுகள் வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட திட்ட அலுவலர், ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சித் திட்டப் பணிகள் செல்வி.மு. சாந்திபிரியதரிசினி, அறிஞர் அண்ணா அரசினர் மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி பேராசிரியர் முனைவர். ஜெ.பூங்குழலி, இயற்கை மருத்துவர் மரு.சசிரேகா, வாலாஜா அரசு மருத்துவமனை மற்றும் வாலாஜா வட்டார ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவர் மரு. கனிமொழி, கல்லூரி மாணவிகள் மற்றும் சுய உதவிக் குழு உறுப்பினர்கள், குழந்தை வளர்ச்சித் திட்ட அலுவலர்கள், மேற்பார்வையாளர்கள், அங்கன்வாடி பணியாளர்கள் அனைவரும் கலந்துக் கொண்டு சிறப்பித்தனர்.

# கே.ஜி.எஃப் உரிகம் டாப் லைன் பகுதியில் கஞ்சா வேட்டை... 634 கிராம் கஞ்சா பறிமுதல்: NDPS சட்டத்தின் கீழ் போலீசார் அதிரடி நடவடிக்கை

கே.ஜி.எஃப் உரிகம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட டாப் லைன் பகுதியில் கஞ்சா கடத்தல் மற்றும் போதைப்பொருள் பயன்பாட்டை கட்டுப்படுத்தும் வகையில் போலீசார் மேற்கொண்ட தீவிர சோதனை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கையில் சுமார் 634 கிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ளதாக போலீசார் தெரிவித்துள்ளனர். உரிகம் பகுதியில் போதைப்பொருள் நடமாட்டம் தொடர்பாக போலீசாருக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் சந்தேகத்திற்கிடமான பகுதிகளில் கண்காணிப்பு தீவிரப்படுத்தப்பட்ட நிலையில், தொடர்ந்து மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையில் கணிசமான அளவு கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது. இந்த சம்பவம் தொடர்பாக 2:70/2026 என்ற வழக்கு எண்ணில் NDPS சட்டத்தின் பிரிவு 20(b)(ii)(A)ன் கீழ் வழக்குப்பதிவு செய்து உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த அதிரடி நடவடிக்கை சர்க்கிள் இன்ஸ்பெக்டர் ஹரிஷ் குமார் தலைமையில் நடைபெற்றதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. அவருடன் சை தேவராஜ் ஜி மற்றும் போலீஸ் பணியாளர்கள்கிருஷ்ணா, விஜய் குமார் ரெட்டி, மகேஷ் சிவன்னா, ஷாஜான் நடாஃப், பரிமளா சேகர் மற்றும் ஓட்டுநர் சங்கர் ஆகியோர் பணியில் ஈடுபட்டிருந்தனர். உரிகம் மற்றும் கே.ஜி.எஃப் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கஞ்சா உள்ளிட்ட போதைப்பொருட்களின் நடமாட்டத்தை கட்டுப்படுத்த போலீசார் தொடர்ந்து கண்காணிப்பு மற்றும் சோதனை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. குறிப்பாக இளைஞர்களை குறிவைத்து போதைப்பொருட்கள் பரவுவதை தடுக்கும் வகையில் போலீசார் தீவிர நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர். சந்தேகத்திற்கிடமான நடவடிக்கைகள் குறித்த தகவல்கள் கிடைத்தால் உடனடியாக போலீசாருக்கு தெரிவிக்க வேண்டும் என்றும் பொதுமக்களுக்கு போலீசார் அறிவுறுத்தியுள்ளனர்.



உரிகம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட டாப் லைன் பகுதியில் ஒரே நடவடிக்கையில் 634 கிராம் கஞ்சா பறிமுதல் செய்யப்பட்டுள்ள சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது. போதைப்பொருள்தடுப்பு நடவடிக்கையை மேலும் தீவிரப்படுத்தும் வகையில் தொடர்ந்து கண்காணிப்பு மற்றும் சட்டரீதியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என போலீசார் தரப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**திண்டுக்கல் மாவட்டம் பழனி அருகே ஆயக்குடி கிராமத்தில் பாப்பம்பட்டி ஏழாவது வாடைச் சேர்ந்த பச்சமுத்து மகன் ராஜ்குமார் வயது 36 தமிழ்நாடு மின்சார வாரியத்தில் ஒப்பந்த தற்காலியாக ஊழியராக பணியாற்றி வந்தார். ஆயக்குடி அருகே சட்ட பாறையில் பணியில் ஈடுபட்டிருந்த போது மின்சாரம் தாக்கியதில் உயிரிழந்ததாக கூறப்படுகிறது தகவல் அறிந்த ஆயக்குடி காவல் நிலைய போலீசார் ராஜ்குமார் உடனே மீட்டு பழனி அரசு மருத்துவமனைக்கு பிரேத பரிசோதனை அனுப்பி வைத்து விசாரணை நடத்தி வருகின்றனர்**



# விடுதியில் தங்கிப் படித்த 14 வயது மாணவனுக்குப் பாலியல் தொல்லை; வார்டன் போக்சோவில் கைது - சேத்துப்பட்டில் அதிர்ச்சி

திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டில் தனியார் விடுதியில் தங்கிப் பள்ளியில் 10ஆம் வகுப்பு படித்து வந்த 14 வயது மாணவனுக்குப் பாலியல் தொல்லை கொடுத்ததாக எழுந்த புகாரில், விடுதி வார்டனை போலீசார் போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்து சிறையில் அடைத்தனர். இச்சம்பவம் அப்பகுதியில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த 14 வயது மாணவன், சேத்துப்பட்டில் உள்ள தனியார் விடுதியில் தங்கி, அப்பகுதியில் உள்ள பள்ளியில் 10ஆம் வகுப்பு படித்து வருகிறார். கடந்த சில நாட்களுக்கு முன்பு காலாண்டுத் தேர்வு விடுமுறைக்காக மாணவன் தனது சொந்த ஊருக்குச் சென்றுள்ளார். விடுமுறை முடிந்த பின்னரும் அவர் பள்ளிக்குச் செல்லாமல் வீட்டிலேயே இருந்ததாகக் கூறப்படுகிறது. இதையடுத்து, பெற்றோர் அவரை மீண்டும் பள்ளிக்கு அனுப்பி வைத்துள்ளனர்.

இந்நிலையில், வேலூர் புதிய பேருந்து நிலையத்தில் மாணவன் அழுதபடி நின்றிருந்ததாகக் கூறப்படுகிறது. இதைக் கவனித்த அங்கிருந்தவர்கள், அவரை வேலூர் தொகுதி தவெக சட்டமன்ற உறுப்பினர் வினோத் கண்ணனிடம் அழைத்துச் சென்றனர்.

இதையடுத்து, மாணவனின் நிலை குறித்து குழந்தைகள் உதவி மையத்துக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது. தொடர்ந்து, மாணவனிடம் விசாரணை நடத்தப்பட்டது.

அப்போது, சேத்துப்பட்டில் உள்ள தனியார்



விடுதியில் வார்டனாகப் பணியாற்றி வந்த சந்தவாசல் பகுதியைச் சேர்ந்த இம்மானுவேல் (25), தனக்குப் பாலியல் தொல்லை கொடுத்ததாக மாணவன் தெரிவித்ததாகக் கூறப்படுகிறது. மேலும், கடந்த இரண்டு மாதங்களில் இதுபோன்ற சம்பவங்கள் நான்கு முறை நடைபெற்றதாகவும் மாணவன் வாக்குமூலம் அளித்ததாகத் தெரிகிறது. இதையடுத்து, மாணவன் மருத்துவப் பரிசோதனை மற்றும் சிகிச்சை க்காக வேலூர் அடுக்கம்பாறையில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்குச் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. மாணவன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டது குறித்து மருத்துவமனை நிர்வாகம் சார்பில் போலீசாருக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதன் அடிப்படையில், சேத்துப்பட்டு போலீசார் சம்பந்தப்பட்ட விடுதி வார்டன் இம்மானுவேலை காவல் நிலையத்துக்கு அழைத்துச் சென்று விசாரணை நடத்தினர். இந்த விசாரணையில், மாணவனுக்கும் மற்றொரு மாணவனுக்கும் இடையே கடந்த ஜூலை மாதம் நடைபெற்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகவும், அதுகுறித்து விடுதி நிர்வாகத்திடம் மன்னிப்புக் கடிதம் அளித்ததாகக் கூறப்படும் தகவல் குறித்தும் விசாரிக்கப்பட்டது.

மேலும், மாணவன் சொந்த ஊருக்குச் சென்றபோது வார்டனிடம் பேசியதாகக் கூறப்படும் விவரங்களையும் போலீசார் விசாரித்தனர். இருப்பினும், மாணவன் அளித்த புகாரின்அடிப்படையில், இம்மானுவேல் மீது வழக்குப்பதிவு செய்த போலீசார், அவரை போக்சோ சட்டத்தின் கீழ் கைது செய்தனர்.

பின்னர், நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட இம்மானுவேல் சிறையில் அடைக்கப்பட்டார்.

இச்சம்பவத்தின் பின்னணி மற்றும் புகாரில் தெரிவிக்கப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் குறித்து போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.


தேச பக்தி நாளிதழில் அனுபவம் உள்ள செய்தியாளர்கள், போட்டோகிராபர்கள், தாலுகா செய்தியாளர்கள் தேவை

தமிழகம் மற்றும் புதுச்சேரி ஆகிய மாநிலங்களில் மாவட்ட மற்றும் தாலுகா வாரியாக அனுபவம் உள்ள பத்திரிக்கை துறையில் சாதிக்க விரும்பும் ஆண் ,பெண் நிருபர்கள் தேவை

G.ராஜா ஆசிரியர்: 9842364068

செய்தி மற்றும் விளம்பர தொடர்புக்கு

R.கண்ணன் இணைஆசிரியர்: 9994422779


## காசநோய் ஒழிப்பில் திருவண்ணாமலை மாவட்டம் புதிய சாதனை:

# 157 கிராம ஊராட்சிகள் 'காசநோய் இல்லா ஊராட்சிகள்' என தேர்வு - ஆட்சியர் வந்தனா கார்க் பாராட்டு சான்றிதழ் வழங்கினார்

திருவண்ணாமலை மாவட்டத்தில் காசநோய் தடுப்பு மற்றும் ஒழிப்பு நடவடிக்கைகளில் சிறப்பாக செயல்பட்ட 157 கிராம ஊராட்சிகளுக்கு பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. காசநோய் இல்லா பாரதம் இயக்கத்தின் கீழ் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பில் நடைபெற்ற நிகழ்ச்சியில், மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் பங்கேற்று தேர்வு செய்யப்பட்ட ஊராட்சிகளுக்கு பாராட்டு சான்றிதழ்களையும், காசநோய் தொடர்பானவீடுதோறும் மதிப்பீட்டுப் பணியில் ஈடுபடும் ஜோஷ் (JOSH) தன்னார்வலர்களுக்கு உறுப்பினர் சான்றிதழ்களையும் வழங்கினார்.

திருவண்ணாமலையில் உள்ள கலைஞர் கருணாநிதி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நேற்று (08.10.2026) நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், காசநோய் குறித்த விழிப்புணர்வை அதிகரித்தல், நோயை ஆரம்ப நிலையிலேயே கண்டறிதல் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரப்படுத்துதல்குறித்து பல்வேறு விழிப்புணர்வு நடவடிக்கைகள் மேற்



கொள்ளப்பட்டன.

காசநோய் ஒழிப்பு நடவடிக்கைகளில் இளைஞர்கள் மற்றும் சமூகத் தன்னார்வலர்களின் பங்களிப்பை அதிகரிக்கும் வகையில் JOSH (Joint Squad for Health) என்ற சமூக அடிப்படையிலான குழு முயற்சி செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதன் மூலம் காசநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதுடன், நோயின் அறிகுறிகள் உள்ளவர்களை ஆரம்ப நிலையிலேயே கண்டறிந்து உரிய மருத்துவப் பரிசோதனைமற்றும்சிகிச்சைக்கு பரிந்துரைக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.

காசநோய் இல்லா பாரதம் இயக்கத்தின்கீழ், காசநோய் தொடர்பான பொதுமக்களின் விழிப்புணர்வு நிலையை மதிப்பிடுவதற்காக நாடு முழுவதும் சமூக அடிப்படையிலான ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது. இதன் ஒரு பகுதியாக திருவண்ணாமலை மாவட்டத்திலும் வீடு தோறும் கணக்கெடுப்பு நடைபெற உள்ளது. இப்பணியில் JOSH தன்னார்வலர்கள் மற்றும் தேசிய மாணவர் படை (NCC) மாணவர்கள், கண்காணிப்பு அலுவலர்களின் மேற்பார்வையில் ஈடுபட உள்ளனர்.

157 ஊராட்சிகள் தேர்வு 2025–2026 ஆம் ஆண்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 860 கிராம ஊராட்சிகளில், நிர்ணயிக்கப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் 157 கிராம ஊராட்சிகள் காசநோய் இல்லா ஊராட்சிகளாக தேர்வு செய்யப்பட்டுள்ளன.

இதில், 11 ஊராட்சிகள் தங்க விருதுக்கும், 14 ஊராட்சிகள் வெள்ளி விருதுக்கும், 132 ஊராட்சிகள் வெண்கல விருதுக்கும் தேர்வு செய்யப்பட்டுள்ளன.

காசநோய் தடுப்பு, நோய் கண்டறிதல், நோயாளிகளைப் பதிவு செய்தல், சிகிச்சைக்கு ஆதரவளித்தல் மற்றும் பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்துதல் உள்ளிட்ட பல்வேறு நடவடிக்கைகளை ஒருங்கிணைந்து மேற்கொண்டதன் விளைவாக இந்தச் சாதனை எட்டப்பட்டுள்ளது.

மாவட்ட நிர்வாகம், சுகாதாரத்துறை, உள்ளாட்சி அமைப்புகள், சுகாதாரப் பணியாளர்கள், மக்கள் பிரதிநிதிகள், தனியார் நிறுவனங்கள், சமூக அமைப்புகள் மற்றும் பொதுமக்களின் ஒருங்கிணைந்த பங்களிப்பு காசநோய் ஒழிப்பு நடவடிக்கைகளுக்கு முக்கிய ஆதரவாக அமைந்துள்ளது.

அறிகுறிகள் இருந்தால் உடனே பரிசோதனை

இரண்டு வாரங்கள் அல்லது அதற்கு மேலாக நீடிக்கும் இருமல், காய்ச்சல், உடல் எடை குறைதல், இரவு நேரத்தில் அதிகமாக வியர்த்தல் உள்ளிட்ட அறிகுறிகள் இருந்தால், பொதுமக்கள் அருகிலுள்ள அரசு சுகாதாரநிலையத்தை அணுகி காசநோய் பரிசோதனை செய்து, உரிய மருத்துவ சிகிச்சை பெற வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது.

மேலும், வீடு தோறும் நடைபெறும் காசநோய் விழிப்புணர்வு மற்றும் மதிப்பீட்டுப் பணிகளின்போது JOSH குழுவினர் மற்றும் தன்னார்வலர்களுக்கு பொதுமக்கள் முழுமையான ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என மாவட்ட ஆட்சியர் வந்தனா கார்க் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து, காசநோய் இல்லா ஊராட்சிகளாக தேர்வு செய்யப்பட்ட ஊராட்சிகளுக்கு பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. மேலும், வீடு தோறும் சென்றுகாசநோய்தொடர்பான விழிப்புணர்வு மற்றும் கணக்கெடுப்பு பணிகளில் சிறப்பாக செயல்பட்ட தன்னார்வலர்களுக்கு உறுப்பினர் சான்றிதழ்களையும் மாவட்ட ஆட்சியர் வழங்கினார்.

நிகழ்ச்சியில் மாவட்ட சுகாதார அலுவலர் மரு. வெங்கட்ரமணன், துணை இயக்குநர் (காசநோய்) மரு. அசோக், திருவண்ணாமலை அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் முனைவர் இரேவதி மற்றும் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் மனிதநேயம் மக்கள் கட்சி மாவட்ட பொதுக்குழு அமைப்பு தேர்தல் 2026 ஆண்டுக்கான நிர்வாகிகள் தேர்வு

தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் மனிதநேய.மக்கள் கட்சி மாவட்ட பொதுக்குழு அமைப்பு





தேர்தல் சென்னை அடுத்த பாடி கே.எஸ்.பி. மஹாலில் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட பொதுக்குழு தேர்தல் அதிகாரி சுற்றுச்சூழல் அணியும் மாநில பொருளாளர் ரியாசுதீன் தலைமையில் நடைபெற்றது. இதில் சிறப்பு அழைப்பாளர்களாக தலைமை நிலைய செயலாளர் வழக்கறிஞர் ஜெய்னுல். ஆபிதீன், மருத்துவ சேவை அணி மாநில செயலாளர். கலீல் ரஹ்மான் ஆகியோர் முன்னிலையில் மனிதநேய மக்கள் கட்சி தலைமை நிர்வாகி கள் உறுப்பினர்கள் கலந்து கொண்டு நிர்வாகிகள் தேர்வு நடைபெற்றது. திருவள்ளூர் கிழக்கு மாவட்டம். தலைவர் கே.யூசுப்அலி, திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் மனிதநேயம் மக்கள் கட்சி, மாவட்ட செயலாளர் என். சாதிக் பாஷா, மாவட்ட பொருளாளர் எம்.ஹபீப் ரஹமான், தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்ற கழகம் திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் (தமுமுக )எஸ். அப்துல் ரகுமான் ஆகியோர் நிர்வாகிகளாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். இதில் ஏராளமான நிர்வாகிகள் கலந்து கொண்டு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு சால்வை அணிவித்து வாழ்த்து தெரிவித்தார்.

# கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலையில் செங்குன்றம் அருகே நடைபெறும் மழைநீர் கால்வாய் பணியினால் உயிரிழப்பு ஏற்படும் அபாயம்

சென்னை கொல்கத்தா தேசிய நெடுஞ்சாலை அமைந்துள்ள செங்குன்றம் நெல் அரிசி வணிகர் சங்க திருமண மண்டபம் சர்வீஸ் சாலையில் மழைநீர் கால்வாய் பணி நடைபெற்று வருகின்றது.

இப்பணிக்காக தோண்டப்பட்ட பள்ளத்தில் கம்பி அமைக்கும் பணி நடைபெறும் இடத்தில் எந்தவித முன்னறிவிப்பு போர்டும் இல்லாமலும், பள்ளத்தின் பக்கவாட்டில் எந்த ஒரு தடுப்பும் இல்லாமல் திறந்து வெளியில் கால்வாய்ப் பணி நடைபெற்று வருகின்றது.

இதனால் பகல் மற்றும்



இரவு நேரங்களில் இரு, மூன்று, நான்கு சக்கர வாகனங்களில் செல்வோர் விபத்தில் சிக்கி உயிரிழப்பு ஏற்படும் அபாயம் உள்ளது. எனவே மழைநீர் கால்வாய் பணியை துரிதப்படுத்துவதோடு பக்கவாட்டில் தடுப்பு அமைத்து பணி நடைபெற வேண்டுமென்று பொதுமக்களும் சமூக ஆர்வலர்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# பொதுப்பணித்துறை. AE.STO. துணையோடு பழனி வட்டம் முழுவதும் சேம்பர்களுக்கு கொள்ளை அடித்து கனிமவள திருட்டின் மூலம் கடத்தப்படும் வண்டல் மற்றும் செம்மண் உடனடியாக நடவடிக்கை எடுக்க தமிழ்நாடு உழவர் பாதுகாப்பு இயக்கம் சார்பாக கோரிக்கை

திண்டுக்கல் மாவட்டம் பழனி வட்டம் நங் காட்சியா ரூ வழிகால் கோட்டம் பொதுப்பணித்துறை அதிகாரிகள் துணையோடு பழனி பகுதியில் உள்ள குளங்களில் மண் திருட்டு பால சமுத்திரம் தாமரைக் குளம் இரவி மங்கலம் செங்குளம் கீரனூர் செங்குளம் உள்பட பல குளங்களில் இருந்து சேம்பர் மற்றும் சூலைகளுக்கு திருடப்படும் வண்டல் மற்றும் செம்மண் சேம்பர் மற்றும் சூலைகளில் அருகே வயல்களில் குழி தோண்டி கொட்டி வைத்துக்கொண்டு அங்கிருந்து



நவீனமுறையில்திருடப்படும் கனிம வள திருட்டு சட்டம் பேசி திட்டம் போட்டு திருட்டுக்கு துணை போகும் பொதுப் பணித்துறை அதிகாரிகள் மீது நடவடிக்கை எடுக்காமல் கைகட்டி வேடிக்கை பார்க்கும் திண்டுக்கல் மாவட்ட நிர்வாகத்திற்கு தமிழ்நாடு உழவர் பாதுகாப்பு இயக்கம் சார்பாக கடும் கண்டனத்தை தெரிவித்துக் கொள்கிறோம்





# கேபிள் டிவி சங்கத்தின் 25 ஆவது வெள்ளிவிழா மாநாடு

கன்னியாகுமரி மாவட்டம் . தமிழக கேபிள் டிவி ஆபரேட்டர்கள் பொதுநல சங்கத்தின் குமரி மாவட்ட சார்பில் 25வது வெள்ளிவிழா மாநாடு நாகர்கோவில் கே.சி.டி.எல் பவனில் நடைபெற்றது.

இந்த மாநாட்டிற்கு கிருஷ்ண சந்திரன் அவர்கள்தலைமைவிகித்தார். சுப்பிரமணியம். தங்கவேலு .ரமேஷ். ஆகியோர் முன்னிலையில் வைத்தார். மாநில பொதுச் செயலாளர் இராதா கிருஷ்ணன் அவர்கள் 25 ஆண்டு சங்கத்தின் நடந்து வந்த பாதையை பற்றி எடுத்துரைத்தார்..

.வெங்கடேஷ் அவர்கள் நன்றி கூறினார் .நிகழ்வில் ஏராளமானோர்கலந்து கொண்டார்கள்.

கேபிள் டிவி ஆபரேட்டர்கள் மற்றும் பணியாளர்கள் என் குடும்பத்துடன் கலந்து சிறப்பாக நடத்தினார்கள் .

# 'ஆறுபூத மருத்துவ அற்புதம்' நூல் வெளியீடு: புதுச்சேரி ஆளுநர் கைலாசநாதர் வெளியிட்டார்

பேராசிரியர் டாக்டர் ஆதி ஜோதி பாபு எழுதிய 'ஆறுபூத மருத்துவ அற்புதம்' என்ற மருத்துவ நூல் வெளியீடு, அண்மையில் புதுச்சேரி ஆளுநர் மாளிகையில் சிறப்பாக நடைபெற்றது. நிகழ்வில், புதுச்சேரி ஆளுநர் கைலாசநாதர் கலந்து கொண்டு, 'ஆறுபூத மருத்துவ அற்புதம்' நூலை வெளியிட்டார். நூலாசிரியர் பேராசிரியர் டாக்டர் ஆதி ஜோதி பாபு மற்றும் மருத்துவத் துறையைச் சேர்ந்த சிறப்பு விருந்தினர்கள் நிகழ்வில் பங்கேற்றனர். இந்நிகழ்வில் டாக்டர் பா. பவித்ரா பாபு, டாக்டர் ஞா. பா. அருண், டாக்டர் பா. சீனிவாசன் ஆகியோர் உடனிருந்தனர். பேராசிரியர் டாக்டர் ஆதி ஜோதிபாபு, இந்தியக் கண்



டுபிடிப்பாளராகவும், தேசிய மற்றும் சர்வதேச அளவில் காப்புரிமைகள் (Patent) பெற்றவராகவும் விளங்கி வருகிறார். மேலும், இந்தியா, ஆசியா மற்றும் உலக சாதனைப் பதிவுகளில் இடம்பெற்றுள்ள சாதனையாளராகவும் அவர் குறிப்பிடத்தக்கவர். 'ஆறுபூத மருத்துவ அற்புதம்' நூல் மருத்துவம் சார்ந்த புதிய கருத்துகளையும் அணுகுமுறைகளையும் எடுத்துரைக்கும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது. நூல் வெளியீட்டு நிகழ்வில் பங்கேற்றவர்கள், நூலாசிரியரின் முயற்சியைப் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்தனர்.

Printed by S.BALASUBRAMANIAN and Published by M.VEERAMANI on behalf of M.VEERAMANI, Printed at "SANKARJI COMPUTER GRAPHICS PRINTER", No. 8/31, Seegampatty, K.Pudupatty (Post), Kulithalai (Taluk) Karur (District) - 639 105, Published At No. 1080. Kattupatti Road. Viralimalai (Taluk), Pudukkottai (District)-621316 EDITOR: GRAJA